13

# நாட்டார் பாடல்

## தாலாட்டுப் பாடல்

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுறாய்? அரியகண்ணால் நீர்வழிய?
அடிச்சாரைச் சொல்லியழ ஆக்கினைகள் பண்ணிவைப்போம்!

மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே!
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே!

ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே!
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே

ஆண்பனையில் நுங்கே! அணில்கோதா மாம்பழமே!
கூப்பிட்டு நான்கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்!



இலவச விநியோகத்திற்காக